**Previous Examination date – 23.06.2014**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 31 of 2014**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : ராஜகண்ணன்** | **Father/Husband's Name : சென்னகேசவன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.02.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

**1. நான் தற்போது ஈரோடு மாவட்டம் பெருந்துறை கோட்டம், அரச்சலூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.09.2013ம் தேதி காலை பழனி நகர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது பழனி சஞ்சய் மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று 10.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று சுப்பிரமணியன் என்பவர் தலையில் அடிபட்டு மயக்க நிலையில் இருந்ததால் அவர் அண்ணன் முருகேசன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று காவல்நிலைய கு.எண்.607/2013 பிரிவுகள் 294(b),324 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அச்சு முதல்தகவல்அறிக்கை நான் தயார் செய்தது தான். அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பழனி பஸ் நிலையத்தில் ஜாமான் வைக்கும் அறை முன்பு உள்ள சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் சின்னப்பன்,குப்புராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வைமகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் முருகேசன், சுப்பிரமணி, கருப்புசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 09.09.2013ம் தேதி மதியம் 13.30 மணிக்கு எதிரியை பழனி பஸ் ஸ்டாண்டில் வைத்து கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு**

அனுப்பி வைத்தேன். 17.09.2013ம் தேதி காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் நட்ராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பதிவு செய்தேன். **காயச்சான்று அ.சா.ஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. காயச்சான்றில் பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் தன்மைக்கேற்ப பிரிவுகள் 294(b),324 இ.த.ச விலிருந்து 294(b),325 ஆக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நேரடி விசாரணையில் இருந்தும், மறைமுக விசாரணையில் இருந்தும் குற்றம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் 09.10.2013ம் தேதி எதிரி மீது 294(b),325 இ.த.ச.வின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.02.23 18:03:58 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.